## தமிழ்நாடு அரசு தொடர்ந்து எதிர்த்து வருகிறது!

# கர்நாடக அரசின் மேகதாது அணைத்திட்டத்தை தடுத்து நிறுத்த சட்டப்பூர்வ நடவடிக்கைகள்!

## நாளிதழ்கள் – ஊடகங்களில் வந்த செய்திக்கு அமைச்சர் துரைமுருகன் விளக்கம்!

**சென்னை, ஆக.25-**

**மேகதாது அணை பற்றி நேற்று (24.08.2024) நாளிதழ்கள் மற்றும் ஊடகங்களில் வந்துள்ள செய்திகள் குறித்து தமிழ்நாடு நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அளித்த அறிக்கை வருமாறு:-**

1. கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்ட மேற்கொண்டு வரும் முயற்சிகளை, தமிழ்நாடு அரசு ஆரம்பம் முதலே தொடர்ந்து எதிர்த்து வருகிறது. இத்திட்டத்தை எதிர்த்து தமிழ்நாடு அரசு பல்வேறு வழக்குகளை தொடர்ந்துள்ளது. இவ்வழக்குகள் அனைத்தும் நிலுவையில் உள்ளன.

2. தமிழக முதல்வர் பதவியேற்றவுடன் 17.06.2021 அன்று இந்திய பிரதமர் அவர்களுக்கு வழங்கிய கோரிக்கை மனுவிலும், 31.03.2022 மற்றும் 26.05.2022 அன்று நேரில் சந்தித்த போது வழங்கிய கோரிக்கை மனுக்களிலும், மேகதாது அணை திட்டத்தையோ அல்லது வேறு எந்த திட்டத்தையோ மேற்கொள்ள கர்நாடகாவிற்கு எவ்வித அனுமதியும் அளிக்க கூடாது என ஒன்றிய ஜல்சக்தி அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறும், வலியுறுத்தினார்கள். மேலும், இப்பிரச்சினை தொடர்பாக முதலமைச்சர் அவர்கள், 13.06.2022 அன்று, இந்திய பிரதமர் அவர்களுக்கு ஒரு விரிவான கடிதம் எழுதினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**மேகதாது அணைத் திட்டத்தை கைவிட கோரிக்கை வைத்தேன்!**

3. அதே போன்று, நான் 06.07.2021 அன்று ஒன்றிய அரசின் ஜல்சக்தி அமைச்சர் அவர்களை சந்தித்து வழங்கிய கோரிக்கை மனுவில் மேகதாது திட்டத்திற்கு அனுமதி அளிக்க கூடாது என வலியுத்தியதுடன், எனது தலைமையில் அனைத்துக் கட்சி தலைவர்கள் குழு, ஒன்றிய அரசின் ஜல்சக்தி அமைச்சர் அவர்களை 16.07.2021 அன்று நேரில் சந்தித்து ஒன்றிய அரசு மேகதாது அணை திட்டத்திற்கு சம்மந்தப்பட்ட மாநிலங்களின் இசைவை பெறாமல் எவ்வித அனுமதியும் வழங்கக் கூடாது என வலியுறுத்தியது. மீண்டும் நான் 05.07.2023 அன்று ஒன்றிய ஜல்சக்தி அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து 2023-2024 பாசன ஆண்டில் பில்லிகுண்டுலுவில் வழங்க வேண்டிய நீரை வழங்க கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறு கோரியதுடன், மேகதாது அணை திட்டத்தினை நிராகரிக்குமாறு அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறும் கோரி ஒரு கோரிக்கை மனுவை வழங்கி வலியுறுத்தினேன்.

4. இதனிடையே, கர்நாடக அரசு அதன் 2022-2023 நிதிநிலை அறிக்



கையில் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக தெரியவந்ததையடுத்து, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் கர்நாடக அரசின் இச்செயலுக்கு 21.03.2022 அன்று கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன், இத்திட்டத்திற்கு எவ்வித அனுமதியும் அளிக்கக் கூடாது என ஒன்றிய அரசையும், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தையும், வலியுறுத்தி தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, அனைத்து கட்சி சட்டப்பேரவை தலைவர்கள் குழுவினை தலைமையேற்று, நான் ஒன்றிய அரசின் ஜல் சக்தி அமைச்சர் அவர்களை 22.06.2022 அன்று நேரில் சந்தித்து, இது குறித்த பொருள் பற்றி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என ஆணையத்திற்கு அறிவுறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினேன்.

**காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திடம் வலியுறுத்தல்!**

5. 01.02.2024 அன்று நடைபெற்ற 28வது காவிரி நீர் மேலாண்மை ஆணைய கூட்டத்தில், நீண்ட விவாதத்திற்கு பிறகு ஆணையம் இத்திட்டத்தினை மத்திய நீர்வள குழுமத்திற்கே திருப்பி அனுப்புவதாக முடிவெடுத்ததை தொடர்ந்து, தமிழ்நாடு நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், 07.02.2024 நாளிட்ட தனது கடிதங்களில் மேகதாது திட்டம் தொடர்பான வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதை சுட்டிக்காட்டி, இத்திட்டம் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று சம்பந்தப்பட்ட இயக்குனரகங்களுக்கு அறிவுறுத்துமாறும் ஒன்றிய ஜல் சக்தி அமைச்சக செயலாளர், மற்றும் மத்திய நீர்வளக் குழும தலைவர் ஆகியோரை கேட்டுக்கொண்டார். மேலும், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சக செயலாளருக்கு 07.02.2024 எழுதிய கடிதத்தில், ஏற்கெனவே 19.07.2019 அன்று நடைபெற்ற வல்லுநர்களைக் கொண்ட மதிப்பீட்டுக் குழுவின் (EAC) 25வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவைக் குறிப்பிட்டதுடன், இது தொடர்பான வழக்குகள் நிலுவையில் இருப்பதையும் குறிப்பிட்டு ToR வழங்குவதற்கான கர்நாடகாவின் எந்தவொரு கோரிக்கையையும் ஏற்க வேண்டாம் என்று சம்பந்தப்பட்ட EAC க்கு அறிவுறுத்துமாறு கோரியுள்ளார்.

இதே போன்று, தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர் அவர்களும் 20.02.2024 அன்று ஒன்றிய ஜல் சக்தி மற்றும் ஒன்றிய சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகங்களின் செயலர்களுக்கு எழுதிய கடிதங்களிலும், கோரியுள்ளார்.

6. இதனை தொடர்ந்து, நான் 23.02.2024 அன்று ஒன்றிய ஜல் சக்தி அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில், 13.12.2024 தேதியிட்ட தனது கடிதத்தில் மேகதாது அணைத் திட்டம் தொடர்பான வழக்குகள் நிலுவையில் இருப்பதை அவர்களே தெரிவித்திருப்பதை குறிப்பிட்டு, உச்சநீதிமன்ற தீர்ப்பு வரும்வரை மேகதாது திட்டத்தை கருத்தில் கொள்ள வேண்டாம் என அமைச்சகத்திற்கும், மத்திய நீர்வளக் குழுமத்திற்கும் அறிவுறுத்துமாறு கோரினேன்.

இதனை தொடர்ந்து, மத்தியில் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு, நான் 05.07.2024 அன்று ஒன்றிய ஜல் சக்தி அமைச்சர் அவர்கள் மற்றும் இணை அமைச்சர்கள் ஆகியோரை நேரில் சந்தித்து 2023-2024 பாசன ஆண்டில் பில்லிகுண்டுலுவில் வழங்க வேண்டிய நீரைவழங்க கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறு கோரியதுடன், மேகதாது அணைத் திட்டம் தொடர்பான வழக்குகள் நிலுவையில் இருப்பதையும் சுட்டிக்காட்டி, இத்திட்டத்தினை நிராகரிக்குமாறு அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறும் வலியுறுத்தி, மீண்டும் ஒரு கோரிக்கை மனுவை வழங்கினேன்.

**தமிழ்நாடு அரசு வலுவான வாதங்களை முன்வைக்கும்!**

7. மேற்குறிப்பிட்டவாறு, மேகதாது அணை தொடர்பாக தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, தமிழ்நாடு அரசு சார்பாக வலுவான வாதங்கள் முன் வைக்கப்படும். காவிரி நடுவர் மன்றம் 05.02.2007ல் அளித்த இறுதித் தீர்ப்பிலும், உச்ச நீதிமன்றம் 16.02.2018 அன்று அளித்த தீர்ப்பிலும், கர்நாடகாவில் மேகதாது அணைக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. மேலும், கர்நாடக அரசு இத்திட்டத்திற்கு மத்திய நீர்வள குழுமத்தின் பன்மாநில நதிநீர் இயக்குனகரத்தின் ஒப்புதல், வனம் மற்றும் சுற்றுசூழல் அமைச்சகத்தின் ஒப்புதல், படுகை மாநிலங்களின் ஒப்புதல், இவை எதையும் பெறாமல் கட்ட இயலாது. கர்நாடக அரசின் இத்திட்டத்தை தடுத்து நிறுத்த, தமிழக மக்கள் மற்றும் விவசாயிகளின் நலன் காக்க தமிழ்நாடு அரசு அனைத்து முயற்சிகளையும், சட்டபூர்வமான நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் குறிப்பிட்டுள்ளார்.

---

## தேசியக் கொடி ஏற்றும் உரிமையைப் பெற்ற முதலாமாண்டில் கலைஞரும் – அவரது மகன் முதல்வர் மு.க.ஸ்டாலின் பொன்விழா ஆண்டிலும் கொடியேற்றியது

# வரலாற்றில் முத்திரை பதிக்கும் நிகழ்வுகளாகும்!

## 'தினத்தந்தி' தலையங்கத்தில் புகழாரம்!

சென்னை, ஆக.25-

"தேசியக் கொடி ஏற்றும் உரிமையைப் பெற்ற முதலாமாண்டில் முத்தமிழறிஞர் அவர்களும் - அவரது புதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொன்விழா ஆண்டிலும் கொடியேற்றியது வரலாற்றில் முத்திரை பதிக்கும் நிகழ்வுகளாகும்" என்று 'தினத்தந்தி' நாளேட்டின் தலையங்கத்தில் புகழாரம் சூட்டப்பட்டுள்ளது.

அது வருமாறு :-

ஆங்கிலேய ஆதிக்கத்தில் இருந்து இந்தியா சுதந்திரம் பெற்றது 1947ம் ஆண்டு ஆகஸ்டு 15ந்தேதியாகும். இந்த நாளைப்பற்றி மறைந்த அறிஞர் அண்ணா குறிப்பிடும்போது, "1947 ஆகஸ்டு 15 அந்நிய ஆதிக்கத்துக்கு கணக்கு தீர்த்த நாள்" என்றும், "ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிற ஆகஸ்டு15 சுதந்திரத்தின் பயன்களை கணக்கு பார்க்கிற நாள்" என்றும் அழகுபட கூறினார். அதுபோல, இந்தியா குடியரசு நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது 1950ம் ஆண்டு ஜனவரி 26ந்தேதியாகும். அதனால்தான் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு 15ந்தேதி சுதந்திர தினம் என்றும், ஜனவரி மாதம் 26ந்தேதி குடியரசு தினம் என்றும் கொண்டாடுகிறோம்.



தினத்தந்தி

DAILY THANTHI

வெல்க தமிழ்

24.8.2024 (சனிக்கிழமை)

**இது கலைஞர் பெற்றுத்தந்த உரிமை!**

ஆங்கிலேய ஆதிக்கத்தில் இருந்து இந்தியா சுதந்திரம் பெற்றது 1947-ம் ஆண்டு ஆகஸ்டு 15-ந்தேதியாகும். இந்த நாளைப்பற்றி மறைந்த அறிஞர் அண்ணா குறிப்பிடும்போது, "1947 ஆகஸ்டு 15 அந்நிய ஆதிக்கத்துக்கு கணக்கு தீர்த்த நாள்" என்றும், "ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிற ஆகஸ்டு 15 சுதந்திரத்தின் பயன்களை கணக்கு பார்க்கிற நாள்" என்றும் அழகுபட கூறினார். அதுபோல, இந்தியா குடியரசு நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது 1950-ம் ஆண்டு ஜனவரி 26-ந்தேதியாகும். அதனால்தான் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு 15-ந்தேதி சுதந்திர தினம் என்றும், ஜனவரி மாதம் 26-ந்தேதி குடியரசு தினம் என்றும் கொண்டாடுகிறோம்.



சுதந்திர தினத்தன்று டெல்லி செங்கோட்டையில் இருந்து பிரதமர் தேசியக் கொடியேற்றி வைத்து ஆற்றும் உரை மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

அதுபோல, மாநில தலைநகரங்களில் 1974ம் ஆண்டு வரை சுதந்திர தினத்தன்று கோட்டை கொத்தளத்தில் இருந்து மாநில கவர்னர்களே தேசியக்கொடியை ஏற்றி வந்தனர். இதுபோல, குடியரசு தினத்தன்றும் தேசியக்கொடியை இன்றுவரை கவர்னர்களே ஏற்றி வருகிறார்கள். டெல்லியில் குடியரசு தினத்தன்று ஜனாதிபதி கொடியேற்றுகிறார். "டெல்லியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமருக்கு சுதந்திர தினத்தன்று தேசியக்கொடியை ஏற்றிவைக்கும் உரிமை இருக்கும்போது, மாநிலங்களில் மட்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்-அமைச்சர்களுக்கு அந்த உரிமையில்லாமல் கவர்னர்களே தேசிய கொடியை ஏற்றுவதா?" என்று அப்போது தமிழக முதல்-அமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் இந்த பிரச்சினையை கையில் எடுத்தார். அவர் இந்த உரிமையை தனக்காக, அதாவது தமிழ்நாட்டுக்காக மட்டும் கேட்கவில்லை. அனைத்து மாநில முதல் மந்திரிகளுக்கும் சேர்த்தே கேட்டார்.

மாநில சுயாட்சி பற்றி பேசும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அதை செயலிலும் நிரூபிக்கும் வகையில், 1974ம் ஆண்டு பிப்ரவரி மாதம் சென்னையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது, "குடியரசு தினத்தன்று டெல்லியில் ஜனாதிபதியும், சுதந்திர தினத்தன்று பிரதமரும் தேசியக்கொடி ஏற்றும்போது, இந்த சலுகையைக்கூட மாநில முதல்வர்கள் அனுபவிக்கவில்லை" என்று பேசினார். தொடர்ந்து மத்திய அரசாங்கத்துக்கு அவர் விடுத்த கோரிக்கையால் 1974ம் ஆண்டு ஜூலை 31ந்தேதி, "மாநில முதல் அமைச்சர்களை தேசியக்கொடியேற்ற அனுமதிக்க வேண்டும்" என்ற தமிழ்நாடு அரசின் பரிந்துரையை மத்திய அரசாங்கம் ஏற்று, அந்த ஆண்டு முதல் மாநில தலைநகரங்களில் சுதந்திர தினத்தன்று மாநில முதல்வர்கள் தேசியக்கொடியை ஏற்றுவார்கள் என்று அறிவித்தது.

கலைஞர் அவர்கள் விடுத்த கோரிக்கையை, எழுப்பிய உரிமை குரலை அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி ஏற்றுக்கொண்டு, அதற்கான அறிவிப்பை வெளியிட்டதும் சிறப்புக்குரியது. அந்த ஆண்டு சுதந்திர தினத்தன்று சென்னை கோட்டையில் முதல்-அமைச்சர் கலைஞர் அவர்கள் முதல் முறையாக தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். அனைத்து மாநிலங்களிலும் அந்தந்த மாநில முதல்மந்திரிகள் கலைஞரின் முயற்சியின் பலனால் தேசியக்கொடியை ஏற்றி வைக்கும் உரிமையை பெற்றார்கள். இந்த உரிமையை பெற்று இந்த ஆண்டோடு 50 ஆண்டுகள் ஆகிவிட்டன. மாநில முதல்-அமைச்சர்களுக்கு கொடியேற்றும் உரிமை கிடைத்து இது பொன்விழா ஆண்டாகிறது. இந்த உரிமையை பெற்று முதல் ஆண்டில் கலைஞர் அவர்களும், பொன் விழா ஆண்டில் அவர் மகன் மு.க. ஸ்டாலின் அவர்களும் தேசியக்கொடியை ஏற்றி வைத்தது வரலாற்றில் முத்திரை பதிக்கும் நிகழ்வாகும்.

இவ்வாறு 'தினத்தந்தி' புகழாரம் சூட்டியுள்ளது.





திருவள்ளூர் மத்திய மாவட்ட பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் ஏற்பாட்டில் நடைபெற்றது இக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, பல்வேறு ஆலோசனை வழங்கி சிறப்புரையற்றினார். உடன் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, எஸ்.ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், டி.தேசிங்கு, ஜி.ஆர்.திருமலை, தி.வே.முனுசாமி, த.எத்திராஜ், எம்.முத்தழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், சன்.பிரகாஷ், பரமேஸ்வரி கந்தன், இளைஞர் அணி கே.சுரேஷ்குமார், டி.அண்ணாமலை, ஏ.ஜனார்த்தன், எம்.இளையான், ஏ.ஆர்.பாஸ்கர், சுமதி குமார், கே.எஸ்.புகழேந்தி, ஆர்.பிரபாகரன், வி.பி.பிரகாஷ், ஜி.எஸ்.சங்கீதா, ஏ.ஜி.ரவி, என்.சண்முகம், பேட்டை திருமலைராஜ், வி.தணிகாசலம், எம்.ராம்பாபு, சாந்தி ஜனார்த்தன், ஜி.சி.சி.கருணாநிதி, அக்னி ராஜேஷ், கே.ஜி.ஆர்.எஸ்.ஸ்டாலின், கேசவன், திருலோகசுந்தர், சய்மோகன், பவானி, பரிமளழகன், சுமதி, செந்தமிழரசன் உள்பட பலர் உள்ளனர்.

---

## முடிவுகளை விரைவாக வெளியிட நடவடிக்கை!

# டி.என்.பி.எஸ்.சி. தேர்வுகள் நேர்மையாக நடத்தப்படும்!

## தேர்வாணையத் தலைவராகப் பொறுப்பேற்ற எஸ்.கே.பிரபாகர் உறுதி!

*சென்னை, ஆக. 25 -*

டி.என்.பி.எஸ்.சி.யின் புதிய தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி எஸ்.கே. பிரபாகர், தேர்வுகள் நேர்மையாக நடத்தப்படும் என உறுதி அளித்தார். தேர்வு முடிவுகளை விரைவாக வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழக அரசின் பல்வேறு துறைகளுக்கு தேவைப்படும் ஊழியர்களும், அலுவலர்களும் டி.என்.பி.எஸ்.சி. எனப்படும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்படுகின்றனர். நீண்டகாலமாக டி.என்.பி.எஸ்.சி.க்கு தலைவர் இல்லாது இருந்துவந்த நிலையில், அதன் மூத்த உறுப்பினரான முனியநாதன் பொறுப்பு தலைவராகப் பணியாற்றி வந்தார். இதற்கிடையே, கடந்த சில நாட்களுக்கு முன்பு மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி எஸ்.கே.பிரபாகர் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார். இந்நிலையில் அவர் நேற்று முன்தினம் காலை பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு டி.என்.பி.எஸ்.சி. செயலாளர் எஸ். கோபால சுந்தரராஜ், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் அ.ஜான் லூயிஸ் மற்றும் உறுப்பினர்கள், அலுவலர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் எஸ்.கே.பிரபாகர் கூறியதாவது:



தமிழக அரசு பணியில் சேர வேண்டும் என்ற கனவோடு டி.என்.பி.எஸ்.சி. தேர்வுகளை ஏராளமானோர் எழுதி வருகிறார்கள். தேர்வுகள் நேர்மையாக நடத்தப்படும் என உறுதியளிக்கிறேன். டி.என்.பி.எஸ்.சி. தேர்வுகளுடன் மற்ற தேர்வு வாரியங்கள் நடத்தும் போட்டித் தேர்வுகளையும் மாணவர்கள் எழுதுகிறார்கள். இரு தேர்வு தேதிகளும் ஒரே நாளில் இல்லாதவாறு பார்த்துக் கொள்ளப்படும்.

தேர்வுக்கும், தேர்வுமுடிவுகளுக்கும் இருக்கும் இடைவெளியை குறைக்க நடவடிக்கை எடுப்போம். காலதாமதத்தை குறைப்பதுதான் எங்களின் முதல் பணி. ஒவ்வொரு தேர்வுக்கும் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட நாட்களில் தேர்வு எழுதும் நடைமுறை கொண்டுவரப்படும். தேர்வுகள் குறிப்பிட்ட கால அட்டவணைகளில் நடப்பதற்கும், விரைவில் முடிவுகளை வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்படும். டி.என்.பி.எஸ்.சி. பெரிய அளவிலான புகார்கள் இல்லாமல் தரமான முறையில் அரசு தேர்வுகளை நடத்தி வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

தேர்வர்கள் எதிர்பார்ப்பு

யு.பி.எஸ்.சி.யைப் போல் டி.என்.பி.எஸ்.சி.யும் வருடாந்திர தேர்வு அட்டவணையை முறையாகப் பின்பற்றி குறித்த காலத்தில் தேர்வுகளை நடத்தி, தேர்வு முடிவுகளையும் குறித்த காலத்துக்குள் வெளியிட வேண்டும். அதேபோல், குறைவான பணியிடங்களுக்கு நடத்தப்படும் ஆன்லைன் தேர்வுகளின் முடிவுகளை வெகுவிரைவில் வெளியிட வேண்டும் என்று புதிய தலைவரிடம் எதிர்பார்ப்பதாக, டி.என்.பி.எஸ்.சி. தேர்வு எழுதத் தயாராகி வரும் தேர்வர்கள் தெரிவித்தனர்.



தாம்பரம் சட்டமன்ற தொகுதியில் வரும் மழை காலங்களில் வெள்ள பாதிப்பு ஏற்படாமல் இருக்க பொதுப்பணித்துறை சார்பில் தர்காஸ் சாலை, இரும்புலியூர், திருமலை நகர், ஆகிய இடங்களில் புதிதாக கட்டப்பட்டு வரும் மழைநீர் வடிகால்வாய்களை தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. ஆய்வு செய்து பின்பு தாம்பரம் சட்டமன்ற அலுவலகத்தில், பொதுப்பணித்துறை மற்றும் மாநகராட்சி அலுவலர்களுடன் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் மேற்கொண்ட பணிகளை விரைந்து முடிக்க ஆலோசனைகளை வழங்கினார். இந்நிகழ்வில் மண்டல குழு தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், செம்பாக்கம் தெற்கு பகுதி செயலாளர் இரா.சுரேஷ், மாமன்ற உறுப்பினர்கள், பி.புகழேந்தி, சி.சுரேஷ், எல்.பெரியநாயகம், கிரிஜாசந்திரன், பொதுப்பணித்துறை மற்றும் மாநகராட்சி உயர் அலுவலர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள், மற்றும் குடியிருப்பு நலசங்கத்தினர் பங்கேற்றனர்.